ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ வாட மருதிடை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ வாட மருதிடை ॥

## திருச்சித்திரகூடம் - 2

‡வாட மருதிடை போகி⋆ மல்லரைக் கொன்றொக்கலித்திட்டு⋆
ஆடல் நன் மாவுடைத்து⋆ ஆயர் ஆநிரைக்கன்றிடர் தீர்ப்பான்⋆
கூடிய மா மழை காத்த⋆ கூத்தன் என வருகின்றான்⋆
சேடுயர் பூம் பொழில் தில்லைச்⋆ சித்திரகூடத்துள்ளானே (1)

பேய் மகள் கொங்கை நஞ்சுண்ட⋆ பிள்ளை பரிசிதுவென்றால்⋆
மா நில மா மகள்⋆ மாதர் கேள்வன் இவன் என்றும்⋆ வண்டுண்
பூ மகள் நாயகன் என்றும்⋆ புலன் கெழு கோவியர் பாடித்⋆
தே மலர் தூவ வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (2)

பண்டிவன் வெண்ணெய் உண்டான் என்று⋆ ஆய்ச்சியர் கூடி இழிப்ப⋆
எண் திசையோரும் வணங்க⋆ இணை மருதூடு நடந்திட்டு⋆
அண்டரும் வானத்தவரும்⋆ ஆயிரநாமங்களோடு⋆
திண் திறல் பாட வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (3)

வளைக் கை நெடுங்கண் மடவார்⋆ ஆய்ச்சியர் அஞ்சி அழைப்ப⋆
தளைத்தவிழ் தாமரைப் பொய்கைத்⋆ தண் தடம்புக்கண்டர் காண⋆
முளைத்த எயிற்றழல் நாகத்து⋆ உச்சியில் நின்றுதுவாட⋆
திளைத்தமர் செய்து வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (4)

பருவக் கரு முகிலொத்து⋆ முத்துடை மா கடல் ஒத்து⋆
அருவித் திரள் திகழ்கின்ற⋆ ஆயிரம் பொன் மலை ஒத்து⋆
உருவக் கருங்குழல் ஆய்ச்சி திறத்து⋆ இன மால் விடை செற்று⋆
தெருவில் திளைத்து வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (5)

‡எய்யச் சிதைந்ததிலங்கை மலங்க⋆ வரு மழை காப்பான்⋆
உய்யப் பரு வரை தாங்கி⋆ ஆ நிரை காத்தான் என்றேத்தி⋆
வையத்தெவரும் வணங்க⋆ அணங்கெழு மா மலை போலே⋆
தெய்வப் புள் ஏறி வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (6)

www.prapatti.com

ஆவர் இவை செய்தறிவார்⋆ அஞ்சன மா மலை போலே⋆
    மேவு சினத்தடல் வேழம்⋆ வீழ முனிந்து⋆ அழகாய
காவி மலர் நெடுங்கண்ணார்⋆ கை தொழ வீதி வருவான்⋆
    தேவர் வணங்கு தண் தில்லைச்⋆ சித்திரகூடத்துள்ளானே (7)

பொங்கி அமரில் ஒருகால்⋆ பொன் பெயரோனை வெருவ⋆
    அங்கவன் ஆகம் அளைந்திட்டு⋆ ஆயிரம் தோள் எழுந்தாட⋆
பைங்கண் இரண்டெரி கான்ற⋆ நீண்ட எயிற்றொடு பேழ் வாய்ச்⋆
    சிங்க உருவின் வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (8)

கரு முகில் போல்வதோர் மேனி⋆ கையன ஆழியும் சங்கும்⋆
    பெருவிறல் வானவர் சூழ⋆ ஏழ் உலகும் தொழுதேத்த⋆
ஒரு மகள் ஆயர் மடந்தை⋆ ஒருத்தி நிலமகள்⋆ மற்றைத்
    திரு மகளோடும் வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (9)

‡தேன் அமர் பூம் பொழில் தில்லைச்⋆ சித்திரகூடம் அமர்ந்த⋆
    வானவர் தங்கள் பிரானை⋆ மங்கையர் கோன் மருவார்⋆
ஊன் அமர் வேல் கலிகன்றி⋆ ஒண் தமிழ் ஒன்பதோடொன்றும்⋆
    தான் இவை கற்று வல்லார்மேல்⋆ சாரா தீவினை தாமே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com